**தொடன்கொட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடன்கொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்த ஒருங்கிணைந்த செலவினப் பொழிப்பின் படி மூலதனச் செலவினம் ரூபா 55,075 தொகையாகவும் கப் வண்டிக்குரித்தான கடன் தவணைப்பணமான ரூபா 706,273 தொகையுடன் மொத்த மூலதனச் செலவினம் ரூபா 761,348 தொகையான போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு ரூபா 816,423 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் ரூபா 55,075 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட வட்டி மீதி செலவினத்திற்கு வரவு வைக்கப்பட்டிராமையை மீளாய்வாண்டின் போது சீராக்குகையில் திரண்ட நிதியம் மாத்திரம் ரூபா 41,852 தொகையால் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட முத்திரை வருமானத் தொகையான ரூபா 7,767,897 தொகையானதுடன் இதற்காக ரூபா 8,658,112 தொகை கிடைக்கப்பெற்றிருந்தமையால் மேலதிகமாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 890,215 தொகையான நிலுவையான முத்திரை வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 4,408,112 தொகை நிலுவையான முத்திரைக் கட்டணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு வருமானச் செலவினக் கணக்குகள் செலவு வைக்கப்பட்டிருந்தன. இதனால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,408,112 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலுவையான முத்திரைக் கட்டணக் கணக்கு மீதி பதியப்படுகையில் அதன் சரியான மீதி ரூபா 7,767,897 தொகையான போதிலும் ரூபா 3,359,785 ஆக மீதி பதியப்பட்டு அம் மீதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 73,062 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிராததுடன் அவை நிலையான சொத்துப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் பேரேட்டின் படி, ஊழியர் பிணைக் கணக்கு மீதி ரூபா 70,920 தொகையான போதிலும் ஐந்தொகைக்கு ரூபா 70,820 தொகையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(எ) கணக்காய்வுத் தினமாகிய 2014 யூலை 09 ஆம் திகதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிராத 2 செயற்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவினத் தொகையான ரூபா 1,000,000 செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டு கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் செலவினமும் தொழிற்சாலைக் கடன்கொடுத்தோர் மீதியும் அதே பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தால் கடன் அடிப்படையில் சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,456 ஆன கப் வண்டியின் பெறுமதி கடன் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்வோ அதன் தவணைப்பணமான ரூபா 706,272 மூலதனமாக்கப்பட்டிருக்கவோ இல்லை. .

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 96,307,863 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,569,580 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,626,457 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 3,640 | 1,939 | 7,557 |
| (ii) | வாடகை | 241 | 141 | 176 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 123 | 123 | 116 |

**2.2.2 வீதவரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மீதி ரூபா 5,718,634 தொகையானதுடன் இதில் ரூபா 3,378,122 தொகை 5 ஆண்டுகளுக்கும் மேல் பழைமை வாய்ந்த மீதியாகக் காணப்பட்டதுடன் ரூபா 1,998,958 தொகை 1 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்குரித்தானவையாகக் காணப்பட்டன. 2014 யூலை 30 ஆம் திகதியளவில் இதில் ரூபா 669,596 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 ஏக்கர் வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 1,335,234 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5 ஆண்டுகளிற்கு மேலான ரூபா 1,317,549 காணப்பட்டது. 2014 யூலை 30 இல் உள்ளவாறு நிலுவையான மீதியில் ரூபா 36,381 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 கைத்தொழில் மற்றும் வியாபார வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வியாபார வரியும் கைத்தொழில் வரியும் முறையே ரூபா 402,390 தொகையாகவும் ரூபா 100,500 தொகையாகவுமானதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 198,580 தொகையும் ரூபா 39,200 தொகையுமானதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 48,200 தொகையும் ரூபா 8,250 தொகையும் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன.

**2.2.5 கடை வாடகை**

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 101,500 தொகையான நிலுவையான கடை வாடகை மீதி நிலவியதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 24,750 தொகையும் 1 முதல் 5 ஆண்டுகளுக்கு இடையில் ரூபா 37,912 தொகையும் நிலவிய போதிலும் 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06, 128 ஆம் 129 ஆம் இலக்க கடைகளின் உடன்படிக்கை மீட்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 12,816,478 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,359,785 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முற்பணக் கொடுப்பனவுகள்**

1981 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு:வரப்பட்ட ரூபா 173,523 தொகையான முற்பண மீதி கணக்காய்வுத் தினமாகிய 2014 யூலை 10 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வங்கிக் கணக்கிணக்கம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு எனினும், கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 119,900 தொகையான 5 காசோலைகள் தொடர்பாக 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) காலாவதியான வைப்புகள்**

2 ஆண்டுகளுக்கு மேல் காலாவதியான ரூபா 1,382,108 தொகையான வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வாகன விபத்து**

சபைக்குரித்தான ஓர் கப் வண்டி 2013 ஏப்ரல் 26 ஆம் திகதியும், ஓர் டிராக்டர் 2013 பெப்ரவரி 27 ஆம் திகதியும் விபத்திற்குட்பட்டிருந்ததுடன் அவ் விபத்துக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் 102, 103 மற்றும் 104 ஆம் விதப்புரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) கூட்டிணைந்த திட்டம்**

நிறுவகத்தின் நோக்கையும் செயற்பணியையும் மேற்கொள்ளப்படுவதற்காக 3 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக வருடாந்தக் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்து முகாமைத்துவம்**

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 756 இன் படி ஒவ்வொரு ஆண்டினதும் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 1647(ஆ) இன் படி சபையிடமுள்ள வாகனமும் அவற்றின் உபகரணம் தொடர்பான முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்தகைய மெய்மையாய்வொன்று வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் படி பேணப்பட வேண்டிய கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128, 132, 134 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் டபிள்யூபீ/எல்ஜீடீ/10/2008 ஆம் இலக்க 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) பாதீடு
(iii) வருமான நிருவாகம்
(iv) இருப்புக் கட்டுப்பாடு
(v) செயற்திட்ட நிருவாகம்